16.03.2026 OS.No.71/2012 DW2 Name :.ஜீவா

குறுக்கு விசாரணை

1. திலகவதி என்னுடைய தாயார். 1ம் வாதியின் வாரிசு சான்றிதழ் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தாயாரை வாரிசு என்ற அடிப்படையில் தான் வழக்கில் சேர்த்துள்ளோம் என்றும் சொத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் சேர்க்கபடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதி துபாயில் உள்ளதை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. செல்விகரசி பெயரில் உள்ள ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.
2. செல்விகரசி என் தகப்பனார் பெயருக்கு என்ன ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் என் தகப்பனார் வளர்ச்சி பணிகள் செய்துள்ளார் என்பதை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் செல்விகரசிக்கு எந்த உரிமையும் இல்லாததால் அவர் என் தகப்பனார் பெயருக்கு ஆவணம் எதுவும் எழுதமுடியாது என்றும் அதன் அடிப்படையில் என் தகப்பனார் என் தாயார் பெயரில் எழுதியுள்ள ஆவணம் சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல.
3. என் தாயார் பெயரில் உள்ள ஆவணத்தின் அடிப்படையில் என் தாயார் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார் என தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. செல்விகரசி வகையராவிற்குள் நடந்துள்ள பல்வேறு வழக்குகளின் விவரங்கள் என்னால் கூறமுடியாது. என்னுடைய தாயார் தற்சமயம் தான் வழக்கு சொத்தில்

சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சுமார் 45 ஆண்டுகள் அதில் தான் உள்ளார். வழக்கில் செல்விகரசி போட்டுள்ள பதில் பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

4. திலகவதி பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். சந்தோஷ்குமார், சேகர் தாக்கல் செய்துள்ள வழக்கில் வாதிகள் தரப்பினர்களாக இல்லை. வழக்கு சொத்தில் அதுமீறி சுவாதீனத்தில் உள்ளோம் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 16/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.16 16:43:29 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.